[24th July 1964

MR. SPEAKER: Already the Hon. Minister has given an answer. The hon. Member cannot presume anything and put it like that.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, உச்சவரம்புச் சட்டம் உருவாக்குகிறபோது உருவாக்கி நிறை வேற்றிய காலத்தில் அதில் சில குறைபாடுகள் இருந்ததாக அட்வெக்கேட்-ஜெனரல் கூறியதாகவும் அந்தக் குறைபாடுகளை நிறைவேற்றாத நிலையில் அச்சட்டம் நிறைவேற்றப்பட்டதாகவும், ஆகவே அது சுப்ரீம் கோர்ட்டுக்கு போகிற போது தாமே சென்று வாதாட முடியாத நிலை காரணமாக அவர் செல்ல மறுத்து விட்ட தாகவும் சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சர்க்கார் ஆலோசகர்கள் சர்க்காருக்கு என்ன ஆலோசனைகள் சொல்கிறார்கள், சர்க்கார் அதுபற்றி அவர்களிடம் என்ன பேசுகிறார்கள் என்பதெல்லாம் காண்பிடன்ஷியல். அவற்றை வெளியே சொல்ல முடியாது. கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்ட கேள்வி, இந்தக் காரணத் திற்காகத்தான் அட்வெக்கேட்-ஜெனரல் ராஜிநாமா செய்தார்களா என்று. அவர்களின் ரெசிங்னேஷன் லெட்டரில் அந்தமாதிரி காரணம் எதுவும் சொல்லவில்லை. என்ன எழுதினார்கள் என்பது தான் எனக்குத் தெரியுமே தவிர அங்கத்தினர் அவர்கள் அவர் களின் மனதில் என்ன இருக்கிறது என்று நினைக்கிறார்களோ அது தெரியாது.

திரு. ஜே. மாதா கவுடர்: இப்போது அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்திய பிறகு உச்சவரம்புச் சட்டம் அமுலுக்கு வருகிறதா? முன்பு நம் மாநிலத்தில் செய்த தேதியிலிருந்து அமுலுக்கு வர, ரெட்ராஸ்பெக்ட்டிவ் எபெக்ட் கொடுத்து சட்டம் செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையயா: கான்ஸ்டிட்யூஷன் அமென்ட் மென்ட்க்கு பிறகு, அது தொடர்ந்து அமுலில் இருப்பதாகத்தான் முடிவு செய்ய வேண்டும்.

வைகை நதி வெள்ளத் தடுப்பு

*683 கேள்வி—**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வைகை நதி ஓடும் பகுதியில் ஆற்றோரங்களில் உள்ள ஊர் களில் (ரெட்டியப்பட்டி; அக்கரைப்பட்டி; நடகோட்டை; கூட்டாத்து, அண்ண அய்யம்பாளையம், குல்லிசெட்டிபட்டி, சோழ வந்தான், முள்ளிப்பள்ளம், தென்கரை) தடுப்புக்கரைச் சுவர் கட்ட உத்தேசமுண்டா?

THE HON. SRI V. RAMAIAH: There is a proposal under contemplation for the formation of flood bank for the river Vagai in the Sholavandan village limits for protecting the villages of Sholavandan, Mullipallam and Thenkarai.

24th July 1964]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: சோழவந்தான், முள்ளிப் பள்ளம், தென்கரை கிராமங்களை காப்பதற்கு சோழவந்தான் கிராம எல்லையில் வெள்ளத் தடுப்பு சுவர் கட்டும் ப்ரப்போசல் இருப்பதாக கூறினர்கள். அதை வரவேற்கிறேன். ரெட்டியப் பட்டி, அக்கரைப்பட்டி, குடகோட்டை, கூட்டாத்து, அன்ன அய்யம்பாளையம் இந்த ஊர்களுக்கும் விஸ்தரிக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா: தனிக் கேள்வி வேண்டும்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: மதுரையில் வைகை நதி தடுப்புக் கரைச் சுவர் கட்ட சில லட்சம் ரூபாய் ஏற்கனவே ஒதுக்கியிருக்கிறோம். அது எந்த நிலையில் உள்ளது? எப்போது வேலை துவங்கப்படும்?

கனம் திரு. வெ. ராமைய்யா: தனிக் கேள்வி வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன்: இந்த அரிப்பை தடுக்கக் கட்டப்படும் சுவர்களுக்கு ஆகும் செலவில் ஒரு பகுதியை பஞ்சாயத்து கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. அப்படியிருப் பதால் சில பஞ்சாயத்துக்கள் கொடுக்க முடியாத காரணத்தினல் கரைகள் கட்டப்படாமல் இருப்பதால் ஊர்களுக்கு ஆபத்து வரு வதை அரசாங்கம் உணருகிறதா? ஆகவே அந்தக் கட்டுப்பாட்டை தளர்த்த அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இரிகேஷன் டிப்பார்ட்மெண்டில் செய்யக்கூடிய வேலைகளுக்கு பெரிய வேலைகளுக்கு பஞ்சாயத்தி லிருந்து அதன் நிதியிலிருந்து பணம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்க மாட்டார்கள். சாதாரண சிறு வேலைகளாக இருக்கும்பட்சத்தில் காண்ட்ரிப்யூஷன் வொர்க்காக இருந்தால் அதுபோல் ஆலோசனை சொல்லியிருப்பார்கள்.

சினிமா தியேட்டர்கள்

*684 கேள்வி—திரு. மா. இராசாங்கம்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

சினிமா தியேட்டர்களை நகரசபைகள் எடுத்து நடத்த அனு மதி வழங்கும் உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: சென்னை நகரத்தைப் பொறுத்த அளவில், இங்கிருக்கின்ற தியேட்டர்களில் அதிகமான அளவில் வருமானம் வந்துக் கொண்டிருக்கிறது ஆகவே இதை கார்ப்ப ரேஷன் எடுத்து நடத்துவதற்காக அரசாங்கம் அனுமதி கொடுக் குமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இப்போது அந்த உத்தேசமில்லை.